பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

02 04 2024 **TUESDAY** 7 15 **AM**

வணக்கம். ஆகாஷ்வாணி- செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. எல்லைப்பகுதியில் நிலவும் பதற்றம் நீங்கும்வரை பாகிஸ்தானுடன் வர்த்தக தொடர்புக்கு சாத்தியமில்லை என்று மத்திய அரசு கூறியுள்ளது.

2. குற்ற வழக்குகளை விரைந்து முடிக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் வலியுறுத்தியுள்ளார்.

3. தாய்லாந்து கடற்படைத் தளபதி அட்மிரல் **Adoong Pan Iam** மூன்று நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

4. இந்துஸ்தான் ஏரோநேட்டிக்ஸ் நிறுவனம் இரண்டு டார்னியர் 228 ரக விமானங்களை கயானா ராணுவத்திற்கு வழங்கியுள்ள து.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

>>>>><<<<<

எல்லைப்பகுதியில் நிலவும் பதற்றம் நீங்கும்வரை பாகிஸ்தானுடன் வர்த்தக தொடர்புக்கு சாத்தியமில்லை என்று மத்திய அரசு கூறியுள்ளது.

சூரத்தில், தெற்கு குஜராத் வர்த்தக மற்றும் தொழில்துறை அமைப்பினர் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசிய வெளியுறவு அமைச்சர் திரு. ஜெய்சங்கர் இதனை தெரிவித்தார்.

எந்த வடிவிலான தீவிரவாதத்தையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் தெரிவித்தார்.

அருணாச்சலப்பிரதேசத்தை சீனா உரிமை கொண்டாடுவது குறித்து பேசிய அவர், அருணாச்சலப்பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதி என்றும், அதன் பெயரை மாற்றுவது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்று கூறினார்.

பொருளாதார ரீதியாக சீனாவை முறியடிக்க, இந்தியா உற்பத்தி துறையில் அவசியம் கவனம் செலுத்த வேண்டும் என்று திரு. ஜெய்சங்கர் வலியுறுத்தினார்.

>>>>><<<<<

நாட்டில் முதல்முறையாக நிலக்கரி மற்றும் லிக்னைட் உற்பத்தி ஒரு பில்லியன் டன்னை கடந்துள்ளதாக மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

மத்திய அரசு அளித்த ஆதரவின் மூலம் கடந்த பத்தாண்டுகளில் நிலக்கரி மற்றும் லிக்னைட் உற்பத்தி 70 சதவீதத்திற்கு மேல் வளர்ச்சியடைந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, நிலக்கரி மற்றும் லிக்னைட் உற்பத்தி ஒரு பில்லியன் டன்னை கடந்துள்ளது, நாட்டின் சுயசார்பை உறுதி செய்வதாகவும், இது வரலாற்றுச் சாதனை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

>>>>><<<<<

தாய்லாந்து கடற்படைத் தளபதி அட்மிரல் **Adoong Pan Iam** மூன்று நாள் பயணமாக இந்தியா வந்துள்ளார்.

நேற்று புதுதில்லியில் அவர், கடற்படை தளபதி அட்மிரல் ஹரிக்குமாரிடம் கலந்துரையாடினார்.

கடல்சார் துறையில் இருதரப்பு ஒத்துழைப்பு, பயிற்சி பரிமாற்றம், தகவல் பகிர்வு குறித்து அவர்கள் விவாதித்தனர்.

முன்னதாக, போர் நினைவுச் சின்னத்தில் தாய்லாந்து கடற்படை தளபதி மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

விமானப்படை தளபதி, பாதுகாப்புத்துறை செயலாளர், தேசிய கடல்சார் பாதுகாப்பு ஒருங்கிணைப்பாளர் ஆகியோரையும் அவர் சந்தித்து பேசவுள்ளார்.

அத்துடன், பாதுகாப்பு தளவாட உற்பத்தி தொழில்துறை அதிகாரிகளையும் அட்மிரல் **Adoong Pan Iam** சந்தித்து பேசவுள்ளார்.

>>>>><<<<<

குற்ற வழக்குகளை விரைந்து முடிக்க தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற மத்திய புலனாய்வு அமைப்பு தின நிகழ்ச்சியில் பேசிய அவர், புதிய வகையிலான குற்றச் செயல்களை எதிர்கொள்ள புதிய தொழில்நுட்பங்களை அணுக வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இத்தகைய தொழில்நுட்ப பயன்பாடுகள், வழக்குளை விரைவாக முடிக்க உதவும் என்று டி.ஒய் சந்திரசூட் குறிப்பிட்டார்.

>>>>><<<<<

மேகாலயாவில் உள்ள இரண்டு மக்களவைத் தொகுதிகளில் 22 லட்சத்து 26 ஆயிரம் வாக்காளர்கள் உள்ளதாக அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. **Tiwari** தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ஷில்லாங்கில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தேர்தலை அமைதியாகவும், நியாயமாகவும் நடத்துவதை உறுதி செய்யும் வகையில் துணை ராணுவப் படையைச் சேர்ந்த 40 கம்பெனிகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

மேகாலயாவில் உள்ள ஷில்லாங் மற்றும் துரா மக்களவைத் தொகுதிகளில் இம்மாதம் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

>>>>><<<<<

மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் மேலும் இரண்டு பேர் கொண்ட பட்டியலை அக்கட்சி வெளியிட்டுள்ளது.

மகாராஷ்ட்டிர மாநிலம் அகோலா தொகுதியில் திரு. அபய் காஷிநாத் பாட்டீலும், தெலங்கானா மாநிலம், வாரங்கல் தொகுதியில் கடியம் காவியாவும் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

>>>>><<<<<

மக்களவை தேர்தலை ஒட்டி, தமிழகத்தில் அனைத்து தொகுதிகளிலும் கட்சித் தலைவர்கள் தொடர் பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலத்தில் நடைபெற்ற பவானிசாகர் சட்டப்பேரவை தொகுதி பிஜேபி செயல் வீரர்கள் கூட்டத்தில் அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. எல். முருகன் கலந்து கொண்டார்.

மத்தியில் பிஜேபி ஆட்சிக்கு வந்த பிறகு, கச்சத்தீவுப் பகுதியில் மீனவர்கள் யாரும் சுட்டுக்கொல்லப்படவில்லை என்று அவர் தெரிவித்தார்.

ராணிப்பேட்டை மாவட்டம், சோளிங்கர் பாண்டியநல்லூரில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, கடந்த சட்டப்பேரவை தேர்தலில் அளித்த தேர்தல் வாக்குறுதிகளை திமுக நிறைவேற்றவில்லை என்று குற்றம் சாட்டினார்.

அரசு பள்ளி மாணவர்கள் மருத்துவப் படிப்பு பயில ஏழு புள்ளி ஐந்து சதவீத உள் ஒதுக்கீடு திட்டம் அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் கொண்டு வரப்பட்டதாகவும் அவர் கூறினார்.

அமலாக்கத்துறை, வருமான வரித்துறை மற்றும் புலனாய்வு அமைப்புகளை எதிர்க்கட்சிகளுக்கு எதிராக மத்திய அரசு பயன்படுத்தி வருவதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு. செல்வப்பெருந்தகை தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை மக்களவைத் தொகுதிக்கு உட்பட்ட திருப்பத்தூர், ஜோலார்பேட்டை பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், கடந்த பத்தாண்டுகளில் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த மத்திய அரசு தவறிவிட்டதாக குற்றம் சாட்டினார்.

இதற்கிடையே, தேர்தலில் வாக்களிப்பதை ஆர்வமுடன் எதிர்நோக்கியிருப்பதாக தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த முதல்முறை வாக்காளர் ஒருவர் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – வாக்காளர் 30 செகண்ட்ஸ்)

இந்நிலையில், தேர்தல் பறக்கும் படையினரும், பல்வேறு பகுதிகளில் வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் பகுதியில் உரிய ஆவணமின்றி எடுத்துச் செல்லப்பட்ட 5 லட்சம் ரூபாயையும், சேலம் மாவட்டம், இளம்பிள்ளை அருகே, சித்தர்கோவில் பகுதியில் ஐந்து லட்சத்து 50 ஆயிரம் ரூபாயையும் தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

திருவள்ளூர் மக்களவைத் தொகுதி தேர்தல் தூதுவராக திரைப்பட பின்னணி பாடகர் திரு. மனோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான அறிமுக நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் திரு. பிரபுசங்கர், அத்தொகுதியின் பொதுப் பார்வையாளர் திரு. அபு இம்ரான் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் தொகுதிக்கான தேர்தல் கீதத்தையும் அவர்கள் வெளியிட்டனர்.

இப்பாடலை பாடலாசிரியர் திரு. யுகபாரதி எழுதி, இசையமைப்பாளர் திரு. சத்யா இசையமைத்துள்ளார். திரைப்பட இயக்குநர் திரு. சரவணக்குமார் இயக்கியுள்ளார்.

(சவுண்ட் - தேர்தல் கீதம் 30 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

இந்துஸ்தான் ஏரோநேட்டிக்ஸ் நிறுவனம் இரண்டு டார்னியர் 228 ரக விமானங்களை கயானா ராணுவத்திற்கு வழங்கியுள்ள து.

இந்த விமானங்களை கொண்டு சென்ற இந்திய விமானப்படை குழுவினரை கயானாவில் உள்ள இந்திய தூதர் திரு. **Amit Telang** வரவேற்றார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள கயானா அதிபர் டாக்டர் இர்ஃபான் அலி, டார்னியர் ரக விமானங்கள் தங்கள் நாட்டின் **Cheddi Jegan** சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

கயானாவிற்கு டார்னியர் ரக விமானங்களை அளித்ததன் மூலம், இரு நாடுகளுக்கு இடையேயான இருதரப்பு உறவில் இது புதிய அத்தியாயம் என்று வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பாளர் திரு. ரந்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்துள்ளார்.

இந்த விமானங்கள், அந்நாட்டில் ஊரகப் பகுதிகள் போக்குவரத்து, அவசரகால மற்றும் பேரிடர் மீட்பு ஆகியவற்றுக்கு உதவிடும் என்று அவர் கூறியுள்ளார்.

**>>>>><<<<<**

மும்பை சர்வதேச திரைப்பட விழாவில் ஆவணப் படங்களை சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு இம்மாதம் 10ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, மார்ச் 31ஆம் தேதி காலக்கெடு விதிக்கப்பட்டிருந்த நிலையில், நாட்டின் தொலைதூர பகுதிகளில் பணிபுரியும் திரைப்பட தயாரிப்பாளர்கள் தங்களது ஆவணப்படங்களை எளிதாக சமர்ப்பிக்கும் வகையில், காலக்கெடு நீட்டிக்கப்பட்டுள்ளது.

**>>>>><<<<<**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ராஜஸ்தான் அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

மும்பையில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த மும்பை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 125 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக கேப்டன் ஹர்திக் பாண்ட்யா 34 ரன் எடுத்தார்.

ராஜஸ்தான் பந்துவீச்சாளர்கள் **Trent Boult, Chahal** ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

126 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ராஜஸ்தான், 15 புள்ளி 3 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 127 ரன் எடுத்து வெற்றிபெற்றது.

அதிகபட்சமாக அந்த அணியின் ரியான் பராக் 54 ரன் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இன்று நடைபெறவுள்ள போட்டியில், பெங்களூரு அணி – லக்னோவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி பெங்களூருவில் இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

பாரிசில் இந்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க இந்திய பளு தூக்கும் வீராங்கனை மீராபாய் சானு தகுதி பெற்றுள்ளார்.

**>>>>>END<<<<<**